எம்.எஸ்.எம்.இ. தொழில் நிறுவனங்கள் குறித்து – த.வெ.க. தலைவர்

நாட்டு நடப்பு தெரியாமல் - அறியாமல் பொய் பிரச்சாரம் செய்வதா?

அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!

சென்னை, ஏப்.16- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் விடுத்துள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் 41.79 இலட்சம் MSME தொழில் நிறுவனங்கள் உத்யம் பதிவு செய்து 3 கோடி நபர்களுக்கு வேலை வாய்ப்பு இந்திய அளவில் தமிழ்நாடு 3-வது இடம் எனவும், நாட்டு நடப்பு தெரியாமல், அறியாமல் MSME நிறுவனங்கள் மூடப்படுவதாக யாரோ எழுதி கொடுப்பதை அப்படியே படித்து த.வெ.க. தலைவர் நடிகர் விஜய் பொய் பிரச்சாரம் செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

த.வெ.க. தலைவர் - நடிகர் விஜய் திருப்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் சிறு தொழில்களை மூடியது தான் திமுக அரசின் சாதனை என உண்மைக்கு புறம்பாக பிரச்சாரம் செய்துள்ளார். அவர் யாரோ எழுதி கொடுப்பதை அப்படியே படிக்கிறார். அவர் செய்தித்தாட்கள் படித்திருந்தால் 2024—2025-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16% வளர்ச்சி அடைந்து இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது என்பது அவருக்கு தெரிந்திருக்கும். தமிழ்நாடு அரசின் தொலைநோக்கு திட்டங்கள், சிறந்த நிர்வாகம், மகளிர் முன்னேற்ற திட்டங்கள், சமச்சீர் வளர்ச்சிக்கான திட்டங்கள் ஆகியவற்றால் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத மிகப்பெரிய தொழில் வளர்ச்சிக்கு MSME தொழில் நிறுவனங்களின் பங்களிப்பும் ஒரு முக்கிய காரணம் என்பது அவருக்கு தெரிந்திருக்கும்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உத்யம் பதிவு செய்வதில் தமிழ்நாட்டில் 31.03.2026 வரையிலான காலத்தில் 41.79 இலட்சம்

MSME தொழில் நிறுவனங்கள் உத்யம் பதிவு செய்து 3.02 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான உத்யம் பதிவு செய்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை கொண்டுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு 3வதாக உள்ளது.

இதுமட்டுமல்லாமல், MSME துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி தி.மு.க. ஆட்சியில் 3 மடங்கிற்கு மேல் உயர்த்தப்பட்டுள்ளது. 2020-21-ஆம் நிதியாண்டில் அ.தி.மு.க. ஆட்சியில் ரூ. 545.62 கோடி என இருந்த நிதி ஒதுக்கீடு 2025-26-ஆம் நிதியாண்டில் ரூ.1,918.22 கோடி ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் 6 வகையான சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 84,345 நபர்களுக்கு ரூ.2,587.59 கோடி மானியத்துடன் ரூ.6,679.11 கோடி கடன் வழங்கப்பட்டு புதிய தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளது.

முதலீட்டு மானியம், ஊதிய பட்டியல் மானியம், மின் மானியம், பின்முனை வட்டி மானியம் உள்ளிட்ட 10 வகையான மானியப்பட்டியல் கீழ் 24,202 MSME நிறுவனங்களுக்கு ரூ. 1728.65 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தொழில் முனைவோர்கள் தொழில் கூடங்கள் அமைக்க கடந்த 5 ஆண்டுகளில், 13 மாவட்டங்களில் ரூ.387 கோடி மதிப்பீட்டில் 697.81 ஏக்கர் பரப்பளவில் 17 சிட்கோ தொழில்பேட்டைகள் தொடங்கப்பட்டுள்ளது.

14 மாவட்டங்களில் 543.31 ஏக்கர் பரப்பளவில் ரூ.419 கோடியே 58 லட்சம் மதிப்பில் 16 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் எவ்வித உதவியும் இன்றி, அரசியல் அழுத்தங்களையும் மீறி, தமிழ்நாட்டில் 41.79 இலட்சம் MSME நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கான சூழலை தமிழக முதல்வர் அவர்கள் உருவாகியுள்ளார்கள்.

எனவே, MSME நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளது என்கின்ற த.வெ.க தலைவர் நடிகர் விஜய் அவர்களின் பொய் பிரச்சாரம் உண்மைக்கு புறம்பானது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரணிபுத்தூர் ஊராட்சியில் ஆலந்தூர் தொகுதி தி.மு.க. வெற்றி வேட்பாளர் தா.மோ.அன்பரசன் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எத்திராஜ், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினை: சந்திரபாபு நாயுடுவின் கருத்து என்ன?

கடந்த ஆண்டு மார்ச் மாதம் தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தென்மாநில முதல்வர்களின் கூட்டத்தைக் கூட்டி நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு குறித்து விவாதித்தார்.

அப்போது சந்திரபாபு நாயுடு "இப்போது அதற்கு என்ன அவசரம்? அந்தச் சமயம் வரும்போது பார்க்கலாம்" என்ற கருத்துபட வெளியில் இருந்து தனது அபிப்ராயத்தை வெளியிட்டு இருந்தார். இது ஏடுகளில் வெளிவந்தது.

இப்போது அவரைத் தவிர எல்லோருடைய கருத்துகளும் நாளேடுகளில் வெளியாகி இருக்கின்றன. தென் மாநிலங்களின் கருத்துகள் ஒரே மாதிரியாக இருக்குமானால் நல்லதல்லவா?

சந்திரபாபு நாயுடுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசு விழாமல் காக்கும் தூண்களில் ஒன்றாக இருக்கிறார். இப்போது மறுசீரமைப்பு குறித்து அவர் கருத்து சொல்லலாமே!

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல்படுத்தியதால் தென் மாநிலங்கள் மக்கள் தொகையில் பின்னடைவை பெற்று விட்டன. இதனால், தென் மாநில நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையுமல்லவா?

வட மாநிலங்களுக்கு அந்த நிலை இல்லை, அவை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல்படுத்தவில்லை!

சந்திரபாபு நாயுடுவின் கருத்து என்ன?

- க. திருநாவுக்கரசு

திருவள்ளூர் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் மீது மோசடிப் புகார்!

ரூ. 1.75 கோடி ஏமாற்றியதாக குற்றச்சாட்டு!

திருவள்ளூர், ஏப்.16- திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் மீது ரூ. 1.75 கோடி மோசடி செய்ததாக எஸ்பி இடம் புகார்: வேட்புமனு தாக்கலின் போது வாங்கிய கடனை பிரமாண பத்திரத்தில் மறைத்ததால் ஏமாற்றும் நோக்கத்தோடு செயல்படுவதாகவும், தேர்தலில் போட்டியிட தேர்தல் ஆணையம் தடை விதிக்க வேண்டும் என்றும், பணத்தை பெற்றுத் தருமாறும் பாதிக்கப்பட்ட பொறியியல் கல்லூரி உரிமையாளர் புகார் தெரிவித்தள்ளார்.

திருவள்ளூர் அடுத்த வேப்பம்பட்டு பகுதியை சேர்ந்தவர் எம்.ஜி.பாஸ்கரன். இவர் வேப்பம்பட்டு பகுதியில் பொறியியல் கல்லூரி நடத்தி வருகிறார். கம்மா நாயுடு வகுப்பை சேர்ந்தவர் ஆவார். இந்நிலையில் திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளராக போட்டியிடும் பி.வி.ரமணாவும் அதே வகுப்பை சேர்ந்தவர் என்பதால் கடந்த 2018 ஆம் ஆண்டில் அவரது தொழில் வளர்ச்சிக்காக சிறுக சிறுக ரூ. 1. கோடியே 75 லட்சம் ரூபாய் கடனாக வாங்கியவர் திருப்பி செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு நேரில் வந்து பணத்தை தருவதாக ஒப்புக் கொண்டு சென்றவர் அதன் பிறகு நேரில் சந்திக்காமலும் செல்போனில் தொடர்பு கொண்டால் முற்றிலுமாக தவிர்த்து வந்துள்ளார். தொடர்ந்து பணம் தருவதாக சொன்ன அதிமுக வேட்பாளர் பி.வி.ரமணா பணத்தை தராமல் ஏமாற்றி வந்துள்ளார். பணத்தையும் தராமல் அதற்கு வட்டியும் தராமல் ஏமாற்றியதோடு பதில் சொல்லாததால் அவர் தன்னை ஏமாற்றும் நோக்கத்தோடு செயல்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் இந்த 2026 சட்டமன்ற தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிடும் பி.வி. ரமணா தனது வேட்புமனு தாக்கலின் போது சமர்ப்பிக்கப்பட்ட பிரமாண பத்திரத்தில் இந்த ரூ 1.75 கோடி ரூபாய் கடன் தொகையை அவர் மறைத்து இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த எம்.ஜி.பாஸ்கரன் போலீசில் புகார் கொடுப்பதாக கூறியுள்ளார். அதற்கு வேட்பாளர் பி.வி.ரமணா பத்தோடு இது ஒன்னு என்று அலட்சியமாக பதில் அளித்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த பாஸ்கரன் இன்று திருவள்ளூர் எஸ்.பி. அலுவலகத்தில் புகார் அளித்தார். அதில் தொழில் விருத்திக்கா கவும், தனிப்பட்ட தேவைகளுக்காகவும் வாங்கிய ரூ. 1.75 கோடியை தராமல் ஏமாற்றிய அதிமுக வேட்பாளர் பி.வி ரமணா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் புகார் அளிக்கப் போவதாகவும் பாதிக்கப்பட்ட பாஸ்கரன் தெரிவித்தார்.

மேலும் வாங்கிய கடனை ஏமாற்றும் நோக்கத்தோடு செயல்படும் வேட்பாளர் பி.வி. ரமணா வெற்றி பெற்று பொது மக்களுக்கு என்ன செய்வார் என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

கும்மிடிப்பூண்டி தொகுதி கழக வேட்பாளர்

டி.ஜெ.கோவிந்தராஜன் எல்லாபுரம் தெற்கு ஒன்றியத்தில் வாக்குச் சேகரிப்பு!

கிராமம் கிராமமாகச் சென்று ஆதரவு திரட்டுகிறார்!

கும்மிடிப்பூண்டி, ஏப்.16- 2026 கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் வாக்குச் சேகரிப்பு சுற்றுப்பயண விவரம் வருமாறு:-

16-04-2026 - வியாழக் கிழமை - எல்லாபுரம் தெற்கு ஒன்றியம்

கன்னிகைப்பேர் - காலை 08.00 மணி, நெய்வேலி - காலை 09.00 மணி, திருக்கண்டலம் - காலை 10.00 மணி, பெருமுடிவாக்கம் - காலை 11.00 மணி, பூரிவாக்கம் - பிற்பகல் 12.00 மணி, செங்காளம்மன் கண்டிகை - மாலை 04.00 மணி, தண்டுமேடு - மாலை 05.00 மணி, அழிஞ்சிவாக்கம் - மாலை 06.00 மணி, பூச்சிஅத்திப்பேடு - மாலை 07.00 மணி, வேப்பம்பேடு - மாலை 08.00 மணி.

மேற்கண்டவாறு கழக வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் வாக்காளர்களை கிராமம் கிராமமாகச் சென்று சந்தித்து ஆதரவு திரட்டுகிறார்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து நேற்று (15-4-2026) ஈக்காட்டுத்தாங்கல் பூவிருந்தவல்லி சாலையில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலிபூங்குன்றன், பகுதி கழக செயலாளர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, தொகுதி பார்வையாளர் சைதை சாதிக், மாவட்ட தி.க. தலைவர் இரா.வில்வநாதன், மாவட்ட தி.க. செயலாளர் செ.ரா.பார்த்தசாதி, வட்ட கழக செயலாளர்கள் நா.ராதாகிருஷ்ணன், தா.மோகன்குமார், காங்கிரஸ் ஜோதிபொன்னம்பலம், வி.சி.க.–ம.ஜேக்கப், தே.மு.தி.க – ஆனந்தன், ம.நீ.ம. – கதிர், எஸ்.டி.பி.ஐ. – அபுதாகிர், பிலால், இ.யூ.மு.லீக் – கவுஸ் ஃபேக், த.மு.மு.க சாகுல்ஹமீது, அப்துல் ஜபார், சி.பி.ஐ. – சிவா, சி.பி.எம்.–வேல்முருகன், உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்றனர்.

திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 74 'அ' வட்டத்தில் மங்களபுரம் கிருஷ்ணதாஸ் சாலை முதல் படைப்பகம் எதிரில் 74 'அ' வட்ட கழக செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியாராஜன், பகுதி கழக செயலாளர் தமிழ்வேந்தன் பொதுக்குழு உறுப்பினர் பி.உதயசங்கர், பகுதி துணைச் செயலாளர் பெரம்பூர் ஆர்.ராஜன், கினார் ஆறுமுகம், . நாமதேவன், ஆர்.ராஜராஜன் ஆகியோர் முன்னிலையில் கழக வெற்றி வேட்பாளர் கே.எஸ். இரவிச்சந்திரனை ஆதரித்து கழகப் பேச்சாளர் நாகம்மை, கழக இளம் பேச்சாளர் ஈஸ்வர மூர்த்தி ஆகியோர் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு கழக சாதனைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதி மதச் சார்பற்ற கூட்டணி வேட்பாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர் பாபு நேற்று (15-04-2026) காலை 8.00 மணியளவில் 60-வது வட்டத்தில் உள்ள சத்யா நகரில் வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.இராஜசேகர், எஸ். முரளி, இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, வெ.பரிமளம், பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்:கே.கவியரசு, எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா. பார்த்திபன், லண்டன் க.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வி.ஜி. ராஜேந்திரனை ஆதரித்து கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் நுங்கம்பாக்கம் ஊராட்சியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியினருடன் வீதி வீதியாக சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தினர். உடன் கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மோ. ரமேஷ், மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மாவட்ட அணிகளை அமைப்பாளர்கள் துணைவளர்கள் ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள் மதசார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமான பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.